JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//14/2015 |
| | : | Prosecution P.W - 5 |
| NAME | : | முத்துராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 17.03.2026.

முதல் விசாரணை(Through VC)

நான் தற்போது ராமநாதபுரம் மாவட்டம் மாவட்ட குற்ற பிரிவு இரண்டில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக சேர்ந்தமரம் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது 09.04.2013 ம் தேதி சேர்ந்தமரம் காவல் நிலைய குற்ற எண் 101/2013 இதசபிரிவுகள் 295 வழக்கின் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் போனிபாஸ் மற்றும் தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.**மேற்படி வரைபடம் அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் அந்தோணி வியாகப்பன், செல்வராஜ், ஜேசு,போனிபாஸ், தங்கராஜ், ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 07.05.2013 ம் தேதி காலை 9 மணிக்கு கடம்பன் குளம் ஊருக்கு வடபுறம் உள்ள குளத்தின் அருகே வைத்து எதிரி சவரிமுத்து என்பவரை கைது செய்து விசாரிக்க சாட்சிகள் ரமேஷ் சங்கர், காசிநாதன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் சேர்ந்தமரம் காவல்நிலைய குற்ற எண் 100/2013 இதச பிரிவு 457,380 வழக்கின் சொத்தை அத்தாட்சியில் கைப்பற்றியும் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் பகல் 12 மணிக்கு நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர் சாட்சி காவலர் 2634 முத்துராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எனது புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதசபிரிவுகள் 295 யின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

புகார்தாரர் அந்தோணி வியாகப்பன் மீது ஏற்கனவே அந்தோணி வியாகப்பன் வகையறா என்ற வழக்கு அதே காவல் நிலையத்தில் 34 பேர் மீது இருந்தது என்றால் சரிதான். புகார்தாரர் சந்தேகத்தின் அடிப்படையில் தான் சவரிமுத்து என்பவரை புகாரில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் சம்பவத்தை யாரும் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். மாதா சிலையை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். மத ஆச்சாரப்படி அதை எடுக்க அவர்கள் சம்மதிக்கவில்லை. குற்ற எண் 284/2013,283/2013 இந்து கிறிஸ்துவர்கள் இடையே நடைபெற்ற மதகலவரத்தில் இருதரப்பிலும் 30,30 நபர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் வழக்கு கோப்பை பார்த்தால் தான் தெரியும். இந்த வழக்கில் நான் ஏற்கனவே இந்து, கிறிஸ்துவர்களுக்கு இடையே மதக்கலவரம் ஏற்பட்டதால் சந்தேகத்தின் பேரில் சபரிமுத்து என்பவரை பிடித்து வந்து அவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து ஒருதலைபட்சமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நாள், நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi